



Metro லீடர்
# மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'






லீடர்: 04 இதழ்: 284 12.11.2024 பக்கங்கள்:06 editorml21@gmail.com விலை:75/-


# ஹக்கீம் செய்த துரோகத்தினால் கிழக்கிற்கு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது

## முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல்

ஹக்கீம் கிழக்கின் கட்சி பிரமுகர்களுக்கு செய்த துதோகத்திற்கு இன்று அவர் தேர்தல் பிரச்சார கூட்டங்களுக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனக்கு கிடைக்க வேண்டிய கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை காசுக்காக ஹாபீஸ் நஸீர் அஹமட்டுக்கு ஹக்கீம் வழங்கினார். இன்று ஹாபீஸ் நசீரும் அவருடன் இல்லை.

இத்தேர்தலில் ஹக்கீம் செய்த துரோகத்தனத்திற்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள். இத்தோடு கட்சியின் தலைமைத்துவம் மாற்றப்படும்.

ஹக்கீம் ஹரீஸுக்கு செய்த அநீதிக்கு இத்தேர்தலில் கல்முனை மக்கள் முஸ்லிம் காங்கிரஸை தோற்கடித்து காட்டுவர்.

02 ⏭



# யாழில் இனி புதிய இளம் தலைமைகளுக்கே இடம்

## ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவிப்பு



ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக பல கட்சிகள் தம்முடன் இணைவதற்கு தயக்கம் காட்டியதாக தெரிவித்த ஜனாதிபதி, புதிய இளம் சக்திகளை தேசிய மக்கள் சக்தியுடன் கைகோர்க்குமாறும் அழைப்பு விடுத்தார்.

பஸ்ஸை தவற விட்டவர்களுக்கு இனி பஸ்ஸில் இடம் கிடையாதென குறிப்பிட்ட ஜனாதிபதி, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல்வேறு பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமெனவும் தெரிவித்தார்.

02 ⏭

# ஈஸ்டர் தின தாக்குதல் சம்பவம் - சிஐடியில் ஆஜராக பிள்ளையானுக்கு அழைப்பு



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைக்கு ஆஜராகுமாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் பணித்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் குறித்து சனல் 4 தொலைகாட்சியில் ஒளிபரப்பப்பட்ட காணொளி தொடர்பான வாக்குமூலமொன்றை பெறுவதற்காகவே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராக

02 ⏭

# பொதுத்தேர்தல் வாக்களிப்பில் மை பூசும் விரலில் மாற்றம்



இம்முறை பொதுத் தேர்தல் வாக்களிப்பின் போது வாக்காளர்களின் மை பூசும் விரலில் மாற்றத்தை மேற்கொண்டுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. இதற்கமைய பொதுத் தேர்தலில் இம்முறை வழமை போன்று வாக்காளர்களின் சின்ன விரலில் மை பூசப்பட மாட்டாதென்பதுடன்

02 ⏭

# தேர்தல் கடமையில் 70,000 பொலிஸார்- நாளை முதல் கடுமையான பாதுகாப்பு

பொதுத் தேர்தல் பாதுகாப்பு கடமைகளில் 66,000 - 70,000 வரையிலான பொலிஸ் அதிகாரிகள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மேலும் 10,000 வரையிலான பொலிஸ் அதிகாரிகளும் 12,000 வரையிலான சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளாதுடன் நாட்டின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கபட்டுள்ளது.

மேலும், இம்முறை பாரியளவான தேர்தல் வன்முறை சம்பவங்கள் இடம்பெறவில்லை என்பதுடன் பொலிஸாருக்கு இதுவரையில் 696 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியதோடு நாளையிலிருந்து பாதுகாப்பு செயற்பாடுகள் கடுமையாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## யாழில் இனி புதிய.......

வடக்குக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, பாஷையூரில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் மிகப்பெரிய எழுச்சி யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஏனையவர்களில் இருவரே வெல்வார்கள் என்றே வடக்கில் பேசப்பட்டது. ஊடகங்களும் அதைத்தான் பிரசாரப்படுத்தின. நாம் வெல்வோம் என்ற செய்தி வடக்கில் சரியாக சொல்லப்படவில்லை.

ஆனால் தேர்தலுக்கு பின்னர் எமது காரியாலயங்கள் நிரம்பி வழியத் தொடங்கின. அதன் பிரதிபலனே எமது கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கான மக்கள் கூடியுள்ளனர். பாராளுமன்ற தேர்தல் பிரசாரத்துக்காக தற்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வந்தாரா? முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச யாழ்ப்பாணம் வந்தாரா? இல்லை.

எனினும் நாம் வந்தோம். தேர்தலை வெற்றி கொள்ள மட்டும் எமக்கு யாழ்ப்பாணம் தேவை இல்லை. யுத்தம் இல்லாத நாட்டை உருவாக்கவும் இந்த நாட்டை கட்டியெழுப்பவும் யாழ்ப்பாணம் தேவை.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் யாழ்ப்பாணத்தில் 27,000 வாக்குகள் கிடைத்தன. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது அது மிகவும் சிறிய அளவே. ஆனாலும் அது எமக்கு மிகப்பெரியது. எமது செய்தி தமிழ் மக்களிடம் செல்லவில்லை. தெற்கில் நாம் வேலை செய்தளவுக்கு வடக்கில் வேலை செய்யவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் வடக்கிலுள்ள கட்சிகளின் தயவுடன் ஏனைய கட்சிகள் வடக்குக்கு வந்தன. அவர்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்களையே ஒன்றிணைத்தார்கள். மக்களை ஒன்றிணைக்கவில்லை. தேசிய மக்கள் சக்தியாகிய நாம் வடக்கில் தலைவர்களுடன் பேசியதுடன், மக்களுடன் இணைந்து அரசியல் செய்கிறோம். தெற்குக்கு எதிராக வடக்கிலும் வடக்குக்கு எதிராக தெற்கிலும் செயற்பட்டு எவ்வாறு ஒற்றுமையை காட்டுவது? நாம் ஒரு அரசியல் கட்சியின் கீழ் ஒன்றிணைய தயார் என்பதை இந்த கூட்டம் காட்டுகிறது.

தேர்தலுக்கு பின்னர் திசைகாட்டி அரசாங்கத்தில் இணைவேன். அமைச்சுப் பதவிகளை எடுப்பேன் என சிலர் சொல்கின்றனர். அவர்கள் ஆசனங்கள் எடுத்தாலும் எடுக்காவிட்டாலும் மக்கள் எம்முடன் உள்ளனர். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக பல கட்சிகள் எம்முடன் இணைய தயங்கினர். அவர்களுக்கு நாம் இப்போது சொல்வது பழைய கட்சிகள் பஸ்ஸை தவற விட்டு விட்டன. யாழில் புதிய அரசியல் தலைவர்கள் எழும்புகின்றனர். புதிய இளம் சக்திகள் தேசிய மக்கள் சக்தியுடன் கைகோர்க்க முன் வாருங்கள். பஸ்ஸை தவற விட்டவர்களுக்கு பஸ்ஸில் இடமில்லை.

இந்த நாட்டில் 30 வருடங்கள் தொடர்ச்சியான யுத்தம் நிகழ்ந்தது. எமது பரம்பரை யுத்தத்தில் ஈடுபட்டது. சிங்கள, தமிழ், முஸ்லிம்களிடையே உள்ள சந்தேகம் கோபத்தை முற்றாக ஒழித்து தேசிய மக்கள் சக்தியாக முன்னேறுவோம். எமது ஆட்சியில் சில சந்தேகங்கள் இருக்கலாம். படிப்படியாக அந்த சந்தேகங்கள் நீங்கும். உங்கள் பிரச்சினைகளும் தீரும். எல்லோரும் தமது மொழியில் கதைத்து தமது கலாசாரத்தை பின்பற்றும் நிலையை உருவாக்குவோம். தற்போதும் மூடியிருந்த பாதையை திறந்து வைத்தோம். அதற்கு திறப்பு விழா வைத்தோமா? திறப்பதற்கு வைபவங்கள் தேவையா? அது மக்களின் உரிமை. வேறு யாரும் ஜனாதிபதியாக இருந்திருந்தால் மூடியவரே விழா வைத்து அதனை திறந்திருப்பார்.

படிப்படியாக மக்களின் காணிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். சிலர் சிறையில் இருக்கிறார்கள். அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். சுதந்திரமாக வாழ அனைவருக்கும் உரிமை உண்டு. அப்படி ஒரு நாடு தேவையில்லையா? 2009 யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் யாழ்ப்பாணம் வந்தேன். மோசமான வறுமையில் மக்கள் வாடினர். மக்கள் எவரும் ஆயிரம் வருடங்கள் வாழ்வதில்லை. 70, 80 வருடங்கள் வாழ சிறந்த வசதிகள் வேண்டும். வறுமையின் அடிமட்டத்தில் இருந்த மக்களை அதிலிருந்து நாம் மீட்க முடியாவிட்டால் எந்த அரசாங்கத்தால் அதனை செய்ய முடியும்.

விவசாயம் செய்யுங்கள். உற்பத்திகளுக்கு நியாயமான விலை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். 15,000 இலிருந்து 20,000 உர மானியம் வழங்கப்படும. உங்களுக்கு சொந்தமான கடல் வளம் முற்றிலும் அழிக்கப்பட்டு சட்டவிரோதமாக இந்திய மீனவர்கள் இங்கு மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள். எமது கடலில் எமது மக்கள் மீன்பிடிப்பதை நாம் உறுதி செய்வோம். அதனை எவரும் அழிப்பதற்கு இடமளிக்க மாட்டோம் என ஜனாதிபதி தெரிவித்தார்.

## ஹக்கீம் செய்த .........

சமூகத்திற்கு பயனுள்ள நல்ல நோக்கங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகவே நான் இந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளேன். இந்த தேர்தலில் மக்கள் என்னை நிராகரித்தால் அரசியலில் இருந்து முற்றாக ஒதுங்கி விடுவேன்.

மலாக்கா காணி விவகாரத்தில் என்னை சம்பந்தப்படுத்தி எனது செல்வாக்கை குறைப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் சாய்ந்தமருது பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உறுதிபட தெரிவித்தார்.

## ஈஸ்டர் தின தாக்குதல்.........

சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 2019 ஈஸ்டர் தின ஞாயிறு தாக்குதல்கள் குறித்து கடந்த ஆண்டு சனல் 4 ஆவணப்படத்தில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து குற்றப் புலனாய்வுத் துறை (சிஐடி) விசாரணையைத் தொடங்கியுள்ளது.

பிரித்தானிய சேனலுக்கு ஆசாத் மௌலானா வழங்கிய அறிக்கைகளைக் குறிப்பிட்டு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சில் சமூக அமைப்பு ஒன்று தாக்கல் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது. ஆவணப்படத்தின் கூற்றுக்கள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்று (11) குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

நேற்று (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ இதனை உறுதிப்படுத்தினார்.

## பொதுத்தேர்தல்........

அதற்கு பதிலாக இடது கையின் ஆள்காட்டி விரலில் மை பூச தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இடது கையில் சின்ன விரலுக்கு மை பூசப்பட்டது. வாக்காளர்கள் பலருக்கு இன்னும் கை விரலில் அந்த மை அடையாளம் மறையாமல் உள்ளதாகவும் அதனை கவனத்தில் கொண்டே இம்முறை இடது கையின் ஆள்காட்டி விரலில் மை பூசுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாகவும், அவர் கூறினார்.

இதேவேளை நவம்பர் 14ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதை தொடர்ந்து அதற்கான முதற்கட்ட பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ள நிலையில் இன்னும் 2 தினங்களில் 10ஆவது பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தலில் 17,140,354 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் இம்முறை தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக சர்வதேச கண்காணிப்பாளர்கள் குழுவொன்று ஏற்கெனவே நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுத் தேர்தலை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை

பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு வாக்களிப்பதற்காக தூரப்பிரதேசங்களுக்கு செல்லும் மக்களுக்காக விசேட போக்குவரத்து சேவை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இன்றும் (12) நாளையும் (13) இலங்கை போக்குவரத்து சபை விசேட பஸ் சேவையை நடத்தவுள்ளதாக அதன் தலைவர் ரமல் சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தேர்தலுக்காக தூரப் பிரதேசங்களுக்கு செல்லும் மக்களுக்காக தினசரி ரயில் பயணங்களுக்கு மேலதிக பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே துணைப் பொது மேலாளர் என்.ஜே. இடிபொல அறிவித்தார்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களை தேர்தல் சேவைகளுக்காக பயன்படுத்துவதால் நாளை வாகன நெரிசல் ஏற்படக்கூடும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# EAST லீடர்

## சட்டவிரோதமாக அச்சிடப்பட்ட மாதிரி வாக்குச்சீட்டுக்கள் கல்முனையில் மீட்பு

**(பாறுக் ஷிஹான்)**


32 ஆயிரம் சட்டவிரோதமாக அச்சிடப்பட்ட மாதிரி வாக்குச்சீட்டுக்கள் அரசியல் கட்சி ஒன்றின் பணிமனைக்கு வாகனம் ஒன்றில் எடுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

அம்பாறை கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காசீம் வீதி பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கட்சி ஒன்றின் பணிமனைக்கு இவ்வாறு சட்டவிரோத மாதிரி வாக்குச்சீட்டுக்கள் எடுத்து செல்லப்பட்ட நிலையில் கைப்பற்றப் பட்டுள்ளது. அம்பாறை மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் ஆகியோர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து குறித்த பணிமனைக்கு அருகில் தேடுதல் மேற்கொண்ட நிலையில் பொதி செய்யப்பட்ட சுமார் 32 ஆயிரம் வாக்கு சீட்டுக்களுடன் இரு சந்தேக நபர்களை கடந்த வியாழக்கிழமை கைது செய்திருந்தனர்.

தற்போது கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் மீட்கப்பட்ட சட்டவிரோதமான வாக்குச்சீட்டுக்கள் யாவும் கல்முனை நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்க கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொலிஸாரும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மாணவிகளின் வணிக கண்காட்சியும், சந்தைப்படுத்தலுக்கான விற்பனையும்





**(நூருல் ஹுதா உமர்)**

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) க.பொ.த உயர்தர 2025ஆம் வருட உயர்தர வர்த்தக பிரிவு மாணவிகளது குழு செயற் திட்டத்தினை அடிப்படையாக கொண்ட **"Expo Experts - 2024"** எனும் தொனிப்பொருளில் வணிக கண்காட்சியும் சந்தைப்படுத்தலுக்கான விற்பனை கூடமும் வர்த்தகப் பிரிவு ஆசிரியர் ஏ.ஏ. றிஷாமின் வழிகாட்டலில் வியாழக்கிழமை (07) உயர்தர வணிக மன்றம் மற்றும் கலை வர்த்தக பிரிவின் ஏற்பாட்டில் கல்லூரியின் முதல்வர் ஏ.பி.நஸ்மியா சனூஸ் தலைமையில் ஸ்மார்ட் கட்டிட தொகுதியில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். சஹதுல் நஜீம் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக பாடசாலை பிரதி அதிபர் ஹாஜியானி எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, இலங்கை வங்கி உதவி முகாமையாளர் மற்றும் கிளை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வர்த்தகப் பிரிவு மாணவிகளுடைய படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கம் மூலம் இளம் தொழில் முனைவோர் கலாச்சாரத்தை மேம்படுத்துவதுடன் இது எதிர்காலத்தில் தொழில் முனை நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்த விரைவாக்கவும் மாணவிகள் தொழில் முனைவோர் செயல்முறை அனுபவிக்க அனுமதிக்கிறது. வணிக கண்காட்சியில் விற்க தங்களது தயாரிப்பு அல்லது சேவையை தயாரிப்பாளர்கள் அவர்களின் முயற்சிகளில் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமானதாகவும் லாபகரமாகவும் இருக்குமாறு அனைவரையும் ஊக்குவிப்பது செயற் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர் ஏ.எச் நதிரா, உதவி அதிபர்களான என்.டி நதீகா, எம்.எஸ் மனூனா, கலை வர்த்தகப் பிரிவு ஆசிரியர்கள், பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இடிமின்னல் தாக்கியதில் விவசாயி பலி

**(நாஸர்)**

இடிமின்னல் தாக்கியதில் விவசாயியொருவர் உயிரிழந்த சம்பவமொன்று மட்டக்களப்பு - வந்தாறுமூலை - பெருவெளிவட்டை வயற்பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு - வந்தாறுமூலை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய கதிர்காம நாதன் ரமேஸ்குமார் என்பவரே மரணமடைந்துள்ள-தாக பொலிஸார் கூறினர்.

பெருவெளிவட்டை பிரதேசத்திலுள்ள தனது வயலில் வரம்பு கட்டும் வேலையை முடித்துவிட்டு தனது குடும்ப உறவினர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தபோது இடிமின்னல் தாக்கியுள்ளது. இதில் மோட்டார் சைக்கிள் ஆசனத்தின் பின்னால் அமர்ந்து சென்றவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ள நிலையில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளார். மரணித்தவரின் கையில் மண்வெட்டி இருந்துள்ளது. அவரது உடலில் தீக்காயங்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர்ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சம்மாந்துறையில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

**(தில்சாத் பர்வீஸ்)**

அம்பாறை சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவரை சனிக்கிழமை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளு-க்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கை-களின் போதே சந்தேகத்திற் கிடமாக நடமாடிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 1 கிராம் 955 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்-பட்டுள்ளது. இதனையடுத்து, சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கந்துரட்ட முஸ்லிம் சேவை பிரிவினால் நடத்தப்பட்ட மீலாத் தின கவிதைப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற்றமைக்காக கவிஞர் ஏ.எம்.கஸ்புள்ளாவுக்கு கம்பளை சாஹிரா கல்லூரியில் வைத்து பரிசு மற்றும் நினைவுக் கேடயத்தை அகில இலங்கை முஸ்லிம் வாலிப முன்னணியின் கண்டி பிராந்திய பணிப்பாளர் இஹ்திசாம் வழங்கி வைத்தார். கந்து ரட்ட முஸ்லிம் சேவை தயாரிப்பாளர் ஏ.எம்.எம்.ரலீம் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஏ.ஆர்.எப்.சிமாரா ஆகியோர்கள் அருகே காணப்படுகின்றனர்.

**(படம் : எம்.ஏ.முகமட்)**

# அரசியல் களம் பாராளுமன்ற தேர்தல் –2024

## பிரதேசவாதங்களையும், இனவாதங்களையும் இல்லாமல் செய்வேன்

### வேட்பாளர் எம்.ஐ. ஜாபீர்

(றிபாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் மூவின மக்களையும் ஒருங்கிணைத்து அரசியல் பயணத்தை மேம்படுத்தும் நோக்குடன், அம்பாறை மாவட்டத்திற்கான தனது அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துச் செல்லப்படும் என சுயேச்சை குழு வேட்பாளர் எம்.ஐ. ஜாபீர் உறுதியாகக் கூறினார்.



அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், எமது அம்பாறை மாவட்டத்தில் அனைத்து இன மக்களும் சகோதரத்துவத்துடனும், அமைதியுடனும் வாழ்ந்து வருகின்றனர். இதனிடையே, சில மாற்றுக் கட்சி வேட்பாளர்கள் பிரதேச வாதங்களையும், இனவாதங்களையும் தூண்டி மக்களிடையே தேவையற்ற குழப்பங்களை உருவாக்கி வருகின்றனர். எனினும், நாங்கள் எப்போதும் ஒன்றிணைந்து செயல்பட்டு அனைவருக்கும் நன்மை செய்யும் வகையில், எதிர்கால அபிவிருத்தி திட்டங்களையும், வாழ்வாதார முன்னேற்ற முயற்சிகளையும் செயல்படுத்துவோம் என கூறினார்.

என்னை பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யும் பொழுது, இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் மக்கள் சேவையில் அஞ்சாதபடி செயல்படுவேன் என உறுதியளித்தார்.

## அம்பாறை மாவட்ட தமிழர்களின் பிரதிநிதித்துவம் பறிபோய்விடக்கூடாது

### சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவிப்பு





**(பாறுக் ஷிஹான்)**

யாழ் தலைமைகளின் அந்த நரித்தந்திரத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் எடுபிடிகளுக்கு தகுந்த பாடம் கற்பிக்க நீங்கள் உறுதி எடுங்கள்.கடந்த தேர்தலில் யாழ்ப்பாணத் தலைமைகள் இங்கே நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை மாற்றுத்தலைமையின் அவசியத்தை எம்மக்கள் நன்கு உணர்த்தியுள்ளனர். அதன் காரணமாகவே அம்பாறை மக்களுக்குரிய தலைமைத்துவத்தை வழங்க தமிழ் மக்கள் விடுதலை புலிகளாகிய நாம் முன்வந்துள்ளோம் என தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து காரைதீவு கிராமிய குழு மற்றும் கிராம பொது அமைப்புகளால் ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது கல்முனை குட்டி ஜிம் இளைஞர்கள் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் வெற்றிக்கு கரம்கோர்த்து பணியாற்ற இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது. அம்பாறை மக்களுக்குரிய தலைமைத்துவத்தை வழங்க தமிழ் மக்கள் விடுதலை புலிகளாகிய நாம் முன்வந்துள்ளோம். மட்டக்களப்பை பொறுத்தவரையில் நாம் ஆழ வேரூன்றி அகலக்கால் பதித்துள்ளோம். அங்கே நடந்துள்ள அபிவிருத்திப் பணிகளைப் போன்று அம்பாறை மக்களுக்காகவும் எதிர்காலத்தில் எம்மால் செய்ய முடியும்.

சம்மாந்துறை நாவிதன்வெளி மற்றும் பொத்துவில் போன்ற பிரதேசங்களில் வாழும் எமது மக்கள் கவனிப்பாரற்றவர்களாக பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டிருக்கின்றார்கள். சகோதர இனத்தின் நிர்வாகப் பயங்கரவாதம் கொடிகட்டிப் பறக்கின்றது. வீரமுனைக் கிராமத்து மக்களுக்கு ஒரு வரவேற்பு கோபுரம் அமைக்கும் உரிமை கூட நீண்டகாலமாக மறுக்கப்பட்டு வந்துள்ளது.

இத்தனைக்கும் வீரமுனைப் பிரதேசமானது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்புத் தமிழகத்துடன் கருக்கொண்ட வரலாற்றுப் புகழ் மிக்க இடமாகும். இறுதியாக எமது பிரசன்னமே அந்தப் பிரச்சினையை பகிரங்கப்படுத்தியது என்றார்.

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமின் துரோகத்தனம் அம்பலம்

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஹக்கீம் கண்டியில் பேசும் போது தான் 30 வருட பாராளுமன்ற வாழ்க்கையை விட்டு ஓய்வு பெறவிருப்பதாகவும் அதற்கு பிரதி ஈடாக பாரத் அருள்சாமியை எம்பியாக்க இருக்கிறாராம். எவ்வளவு துரோகத்தனம்? மக்களுக்கு விளங்குமா? இவர் பாரத் அருள்சாமியின் தோளின் மேல் ஏறி தான் எம்பியாவதற்கு தாளம் போடுகிறார். இதை மனோ கணேசன் பின்னர் தான் அறிவார் என "வி ஆ வண்" அமைப்பின் இணைப்பாளர் மொகமட் ரஸ்மின் எச்சரிக்கை விடுத்தார்.

அம்பாறை ஊடக மையத்தில் சமகால அரசியல் தொடர்பாக நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

கண்டியில் நான்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த காலத்தில் வந்தார்கள். இன்று அது குறைந்ததே இவரால்தான். இவர் தான் எப்படியாவது எம்.பி ஆக வேண்டும் என்பதற்கு அம்பாறை போன்ற பிரதேசங்களில் தனித்து கேட்பதற்கு காரணம். ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன் காங்கிரஸ் தலைமையகம் தாருஸலாமில் வருகின்ற வாடகைப் பணம் யாரிடம் போகின்றது? அங்கு ஊழியம் செய்கின்றவர்கள் யார்? இதனை மக்கள் அறிவார்களா?



இவர்கள் அனைவரும் ஹக்கீமின் குடும்ப உறவினர்கள். தாருஸ்ஸலாமால் முஸ்லிம் சமூகத்திற்கு இதுவரை கிடைத்தது என்ன? ஆக நோன்பு காலத்தில் குர்பான் கொடுப்பார்கள். கிழக்கில் தாருஸ்ஸலாம் அமைப்போம் என்றார்கள். எதைக் கிழித்தார்கள்? அங்குள்ள நிர்வாகிகள் 100 பேரும் அவருக்கு ஜால்ரா அடிப்பவர்களை சேர்த்து வைத்திருக்கின்றார். இவர்களால் சமூகத்துக்கு கிடைத்த நன்மைகள் என்ன? யானை மனித மோதல் பற்றி கதைக்கிறார்கள். அண்மையில் சாய்ந்தமருதுக்குள் யானை வந்து போனது. என்ன செய்தார்கள்?

இன்னமும் ஆதவன் பாட்டும் அஷ்ரப்பின் போட்டோவும் வைத்து மக்களை ஏமாற்றலாம் என்று நினைக்கிறார்கள். அது இம்முறை செல்லுபடியாகாது என்பதனை அவர்கள் அறிய வேண்டும். அஷ்ரப்பின் வாழ்க்கையையாவது எதிர்கால இஸ்லாமிய சந்ததிக்கு வழங்கினார்களா? இல்லை தேர்தல் காலத்தில் மாத்திரம் அவரது போட்டோ தேவைப்படுகிறது. இன்று தேசிய மக்கள் சக்தி முஸ்லிம் வேட்பாளர்களால் என்ன செய்ய முடியும்?அவர்கள் இறுக்கமான கட்சி. அவர்களால் சுயாதீனமாக இயங்க முடியாது.

எனவே தான் முஸ்லிம்களுக்கு என்று பாராளுமன்ற உறுப்பினரை வரவழைக்க வேண்டுமானால் நல்லாட்சி தேசிய முன்னணியில் சுயாதீனமாக இயங்கக்கூடியவர்களை தெரிவு செய்யுங்கள். ஏனைய கட்சிகளில் இம்முறை எந்த முஸ்லிமும் வர முடியாது என்பதை நீங்கள் அறிய வேண்டும் .எனவே நல்லாட்சி தேசிய முன்னணி கட்சிக்காக வாக்களியுங்கள் என்றார்.

# அரசியல் களம்

## பாராளுமன்ற தேர்தல் -2024

# ஊடகவியலாளர்களை வலுப்படுத்துவதற்கு முடியுமான ஒத்துழைப்புகளை வழங்குவேன்

### வேட்பாளர் றிஸ்லி முஸ்தபா

**(எஸ்.அஷ்ரப்கான்)**



ஊடகவியலாளர்களின் நலன்களை பேணும் திட்டத்தை முன்மொழிந்து அவர்களை தொழில் ரீதியாக வலுப்படுத்துவதற்கு முடியுமான ஒத்துழைப்புகளை வழங்குவேன் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட பொதுத் தேர்தல் வேட்பாளர் றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

தனது கல்முனை அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

காலாகாலமாக அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் மற்றும் நாட்டுக்கும் பல்வேறு சேவைகளை செய்து வருகின்ற ஊடகவியலாளர்கள் தங்களது கணினி கருவிகள் மற்றும் புகைப்படக் கருவிகள் உட்பட சகல தேவைகளையும் பூரணமாக பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் போதுமான வருமானம் அற்றவர்களாக காணப்படுவது என பல்வேறுபட்ட பொருளாதார ரீதியான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதை நான் அறிவேன். அதுமட்டுமல்லாது உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் உடமைகள் சேதம் என்று உண்மைகளை எழுதுகின்ற ஊடகவியலாளர்களுக்கு மத்தியில் கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் பல்வேறுபட்ட விடயங்களை செய்தமையால் ஊடகத்துறையை ஜனநாயக அடிப்படையிலே செய்வதற்கு ஊடகத்துறையினருக்கு பெரும் அச்சுறுத்தல் காணப்பட்டது.

இந்நிலையை மாற்றி ஊடகவியலாளர்களுக்கு போக்குவரத்துக்கான மோட்டார் சைக்கிள் வழங்குதல், காப்புறுதி திட்டம், அவர்கள் சுதந்திரமாக செயல்படுவதற்கான பல்வேறு திட்டங்களை முன்மொழிவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். எதிர்காலத்திலே நான் அதிகாரத்துக்கு வருகின்ற போது ஊடகவியலாளர்களின் பல்வேறுபட்ட தேவைகளையும் உணர்ந்தவனாக செயல்படுவேன் என்றார்.

# வேட்பாளர் தீர்மானத்திற்காக மக்கள் கட்சியை பழிவாங்க கூடாது

### மு.கா.வேட்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை




**(எஸ்.அஷ்ரப்கான்)**

கல்முனை மக்களுக்கு நாங்கள் ஒருபோதும் துரோகம் இழைக்கப் போவதில்லை. வேட்பாளர் தீர்மானத்திற்காக மக்கள் கட்சியை பழிவாங்க கூடாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித் தேசிய அமைப்பாளர், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றும் போது,

வேட்பாளர்களை தீர்மானிக்கின்ற பொறுப்பு தலைமைத்துவத்திடமும் உயர் பீடத்திடமும் இருக்கின்றது.

எனவே அதற்காக மக்கள் கட்சியை பழி வாங்க கூடாது எமது கட்சி வாழ வேண்டும்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். அப்பிரதிநிதி எந்த கட்சியினை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரியே.

அம்பாறை மாவட்டத்திலேயே மூன்று ஆசனங்கள் என்பது எங்களது கட்சியின் இலக்காகும். அரசியல் கருத்து வேறுபாடு பேதங்கள் பிரதேச வாதங்கள் இல்லாமல் மரச் சின்னத்திற்கு மக்கள் வாக்களிப்பார்களே ஆனால் மூன்று அல்லது இரண்டு ஆசனங்கள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு கிடைக்கும்.

இன்று அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்கு 80 விதமான வாக்குகள் இருக்கும் பிரதேசமாக அட்டாளைச்சேனை மாற்றப்பட்டிருக்கின்றது.

நான் இந்த தேர்தலிலே, உலமாக்கள் புத்திஜீவிகள் மற்றும் கட்சி போராளிகள் கேட்டுக் கொண்டதற்காகவே வேட்பாளராக போட்டியிடுகின்றேன்.

அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை மற்றும் தீகவாபி போன்ற பிரதேசங்கள் உள்ளடங்களாக சுமார் 35,857 வாக்குகள் இருக்கின்றது இதில் 20,000 வாக்குகள் முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கும் படியாக கிடைக்கின்ற விதத்திலே அட்டாளச்சேனை பிரதேசம் மாற்றப்பட்டிருக்கின்றது. இது எங்களது முயற்சியினால் மாற்றப்பட்டிருக்கின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள முஸ்லிம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தான் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். என்றும் குறிப்பிட்டார்.

# புதிய ஜனநாயக முன்னணியின் காரியாலயம் சம்மாந்துறையில் திறப்பு



புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீலின் சம்மாந்துறை தேர்தல் தொகுதிக்கான தேர்தல் செயற்பாட்டு காரியாலயம் செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தி (பொலிஸ் வீதியில்) சம்மாந்துறை மக்களின் முன்னிலையில் ஐ.தே.கட்சி சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் முஹம்மட் பாசித் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

முஸ்லிம் சமூகத்திற்கும், அம்பாறை மாவட்டத்திற்கும், சம்மாந்துறை மண்ணுக்கும் ஏ.எம்.ஜெமீல் செய்த நிறைய சேவைகள் பற்றி நன்றியுடன் நினைவு கூர்ந்த சம்மாந்துறை மக்கள் தமது ஆதரவை அணி திரண்டு வெளியிட்டதுடன் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் ஏ.எம்.ஜெமீலின் கரத்தினை பலப்படுத்தி அவரது வெற்றிக்காக முழுமையாக களத்தில் இறங்கி தேர்தல் பணி செய்ய முன்வந்துள்ளார்கள்.

இந்த தேர்தல் செயற்பாட்டு காரியாலய திறப்பு விழாவில் ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவரும், தேசியப்பட்டியல் வேட்பாளருமான கலாநிதி அன்வர் எம் முஸ்தபா, அக்கட்சியின் தேசிய கொள்கை பரப்பு செயலாளர் நூருல் ஹுதா உமர், ஐ.தே.கட்சி சம்மாந்துறை அமைப்பாளர் பொறியியலாளர் பர்சாத்கான், சிரேஷ்ட அறிவிப்பாளர் ரோஷன் அஸ்ரப் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

sportsml77@gmail.com

SPORTS லீடர்




# இறுதி வரை போராடி தோற்றது இலங்கை அணி:

## தொடரை சமன் செய்த நியூஸிலாந்து!






இலங்கைக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் நியூஸிலாந்து அணியானது 05 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து கிரிக்கெட் அணியானது இலங்கையுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டி20 மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்களில் விளையாடி வருகிறது. முதலில் ஆரம்பமாகியுள்ள டி20 தொடரின் தொடக்கப் போட்டியில் இலங்கை அணியானது நான்கு விக்கெட்டுகளினால் வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இந்த நிலையில் இரண்டாவது டி20 போட்டியானது தம்புள்ளை, ரங்கிரி மைதானத்தில் ஆரம்பமானது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியானது, முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பினை நியூஸிலாந்துக்கு வழங்கியது. அதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணியானது 19.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 108 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் வனிந்து ஹசரங்க 4 விக்கெட்டுகளையும், மத்தீஷ பத்திரன 3 விக்கெட்டுகளையும், நுவான் துஷார 2 விக்கெட்டுகளையும் மற்றும் மகேஷ் தீக்ஷன ஒரு விக்கெட்டினையும் எடுத்தனர். பின்னர் 109 என்ற இலகுவான ஓட்ட இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியானது, 19.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இலங்கை அணி சார்பில் அதிகபடியாக பத்தும் நிஸ்ஸங்க மாத்திரம் 52 ஓட்டங்களை பெற்றார். நியூஸிலாந்து சார்பில் பந்து வீச்சில் அதிகபடியாக கிளென் பிளிப்ஸ், லொகி பெர்குசன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், மைக்கேல் பிரேஸ்வெல் 2 விக்கெட்டுகளையும் எடுத்தனர். இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டி20 தொடரை நியூஸிலாந்து 1:1 என்ற கணக்கில் சமன் செய்தது. போட்டியின் ஆட்டநாயகனாக லொக்கி பெர்குசன் தெரிவானார், தொடரின் ஆட்டநாயகனாக வனிந்து ஹசரங்க தெரிவானர். இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரின் முதல் போட்டியானது நவம்பர் 13 ஆம் திகதி தம்புள்ளையில் ஆரம்பமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது

# இந்திய அணியை வீழ்த்தி தென்னாபிரிக்கா




இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் 3 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய தென்னாபிரிக்க அணி நான்கு போட்டிகளைக் கொண்ட டி20 தொடரை 1–1 என சமநிலைக்கு கொண்டுவந்தது. சென் ஜோர்ஜ் பார்க் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இந்திய அணியை 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 124 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்த தென்னாபிரிக்க அணியால் முடிந்தது. முதல் மூன்று விக்கெட்டுகளும் 15 ஓட்டங்களுக்கு பறிபோன நிலையில் மத்திய வரிசையில் ஹார்திக் பாண்டியா 45 பந்துகளில் ஆட்டமிழக்காது பெற்ற 39 ஓட்டங்களுமே இந்திய அணியின் ஓட்டங்கள் அதிகரிக்கக் காரணமானது.எனினும் பதிலெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சார்பில் ட்ரிஸ்டன் ஸ்டப் ஆட்டமிழக்காது 41 பந்துகளில் 47 ஓட்டங்களைப் பெற்று தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு உதவினார். இதன்மூலம் தென்னாபிரிக்க அணி 19 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

வருன் சக்ரவர்த்தி 4 ஓவர்களில் 17 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தியபோதும் இந்திய அணியின் வெற்றிக்கு உதவவில்லை. இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது டி20 போட்டி நாளை சென்சூரியனில் நடைபெறும்.

# பாகிஸ்தான் அணி 2002இன் பின்னர் முதலாவது தொடர் வெற்றி




அவுஸ்திரேலிய அணியுடனான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் மூன்றாவது போட்டியில் வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணி 22 ஆண்டுகளின் பின் ஆஸி. மண்ணில் ஒருநாள் தொடரை வென்று வரலாறு படைத்தது. பாகிஸ்தான் கிரிக்கெட் அணியானது 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடுவதற்காக ஆஸி. சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் ஆஸி. அணி 2 விக்கெட்களினால் வெற்றியீட்டியது.

அதனையடுத்து நடைபெற்ற 2வது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்று தொடரை சமன் செய்தது. இந்நிலையில் 3வதும், இறுதியுமான போட்டி பேர்த்தில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 139 பந்துகள் மீதமிருக்க 8 விக்கெட்களினால் அபார வெற்றியீட்டி தொடரை வென்று வரலாறு படைத்தது.

இப்பத்திரிகை இல.502,பிரதான வீதி, சாய்ந்தமருது -14யில் அமைந்துள்ள மெற்றோ மீடியா நெற்வேர்க் நிறுவனத்தில் 2024.11.12ம் திகதி அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.